**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) SC.218/2023
Sessions)

( Prosecution P.W.4
Deposition of witness for (Defence
( Court

| | | | |
|---|---|---|---|
| Name | மாரி பூபதி | -- | |
| Father's Name | சுப்பிரமணியம் | Calling | தலைமை காவலர் |
| Village | ராஜபாளையம் | Religion | இந்து |
| Taluk | ராஜபாளையம் | Age | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 17th day of February 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது ராஜபாளையம் தெற்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு வடக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக நான் பணிபுரிந்தபோது 24.09.2022ம் தேதி மாலை 06.30 மணியளவில் ராஜபாளையம் – தென்காசி செல்லும் மெயின்ரோட்டிலுள்ள என் டி ஆர் சூப்பர் மாரக்கெட் அருகில் வனவேங்கை கட்சியை சேர்ந்த சிலர் நரிக்குறவர் மற்றும் குருவிக்காரர் சமுதாயத்தையும் பழங்குடியினர் பட்டியலில் சேர்த்ததுபோல மத்திய அமைச்சரவையின் ஒப்புதல் அளித்தது போல குறவர் சமுதாயத்தையும் தனியாக பிரித்து பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க கோரி ஆர்பாட்டம் செய்துக்கொண்டிருந்தார்கள். அப்போது அங்க பணியிலிருந்த நானும் வடக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் மூவேந்தன், சிறப்பு உதவி ஆய்வாளர் மோகன்ராஜ், முதல்நிலை காவலர் தங்கேஸ்வரன், தெற்கு காவல் நிலைய தலைமை காவலர் மணிராஜ், செல்லபாண்டி, ஆயுதப்படை காவலர் ஆனந்தராஜ் ஆகியோர் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை பார்த்து கலைந்துபோக சொன்னோம். ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை விசாரித்தபோது அவர்கள் சஞ்சய், காளிராஜ், கடற்கரை, ராம்குமார், பாலமுருகன் மகன் முத்துப்பாண்டி, சண்முகவேல், ராஜா, பூமி ராஜா, ஞானசேகர், முருகன், கந்தன் மகன் முத்துப்பாண்டி, ஈஸ்வரன், பேச்சிமுத்து ஆகியோர் என தெரியவந்தது. அதன் பிறகு ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட அவர்கள் பாம்பே லாட்ஜ் அருகே சென்று பணியிலிருந்த மணிராஜ், செல்லபாண்டி ஆகியோர்களை பார்த்து காளிராஜ், பாலமுருகன் மகன் முத்துப்பாண்டி, முருகன் ஆகியோர்கள் போலீஸ்கார தேவடியா மகன்களா, கூதி மகன்களா என அசிங்கமாக பேசினார்கள். அப்போது நாங்கள் ஏன் தேவையில்லாமல் பேசிகிறீர்கள்

எனச்சொல்லி கலைந்து போக்சொன்னோம். அப்போது சஞ்சீவ் ராஜ், கந்தன் மகன் முத்துப்பாண்டி, ஈஸ்வரன், பேச்சிமுத்து ஆகியோர் போலீசாராகிய மணி ராஜ் மற்றும் செல்லபாண்டி ஆகிய இருவரையும் கிழே தள்ளி அவர்கள் கையில் வைத்திருந்த கற்களை இதோடு செத்து தொலைங்கடா என்று சொல்லி மாறி மாறி எரிந்தார்கள். நாங்கள் விலகிவிட்டோம். ஆனால் மேற்படி கற்கள் மணிராஜ் மற்றும் செல்லபாண்டி ஆகியோர்கள் மீது பட்டு மணிராஜ்க்கு இடது பக்க தலை, வலது கை முட்டி, இடது தோள்பட்டையிலும் காயம் ஏற்பட்டு வலி உண்டனது. செல்லபாண்டிக்கு வலது காது அருகில் காயம் ஏற்பட்டது. அவர்களோடு இருந்த சண்முகவேல் என்பவர் பிரச்சனை செய்த அவர்களை தள்ளிக்கொண்டு செல்ல முற்பட்டபோது அங்கு இருந்து அவர்கள் செல்லும்போது எங்களை பார்த்து அரசுக்கு எதிராக போராட எங்களுக்கு உரிமை உள்ளது என்றும் போலீசார் தடுத்தாலும் அவர்களை வெட்டி கொன்றுவிடுவோம் என்றும் மிரட்டினார்கள். மேற்படி சம்பவம் அந்த இடத்தில் இட்லி கடை வைத்திருந்த கிரிஸ்டோபர் என்பவருக்கும் பீடா கடை வைத்திருந்த சிவராமன் என்பவருக்கும் தெரியும். காயபட்ட மணிராஜ் மற்றும் செல்லபாண்டி இருவரையும் ஆயுதப்படை காவலர் ஆனந்தராஜ் அவ்வழியாக வந்த ஒரு ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு அவர்களை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். இது சம்பந்தமாக மணிராஜ் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. சம்பவத்தின்போது எதிரிகள் பயன்படுத்திய கற்களை என்னால் பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். அவைகள் ஏற்கனவே சாபொ1 ஆக குறியீடு செய்யப்பட்டதுதான். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

போராட்டத்தில் மொத்தமே 20 பேர் இருந்தார்கள். நாங்கள் வரும்போதே அந்த இடத்தில் போராட்டம் நடந்துக்கொண்டிருந்தது. இதே கோரிக்கைக்காக சம்பவத்திற்கு முதல்நாள் தமிழகம் முழுவதும் போராட்டங்கள் நடந்தது பற்றி எனக்கு தெரியாது. போராட்டம் நடப்பது பற்றி முன்கூட்டியே காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் தகவல் தெரிவித்துதான் சென்றோம். போராட்டம் செய்த நபர்பள் பற்றி வீடியோ பதிவுகளை பார்த்து தெரிந்துக்கொண்டோம். போராட்டம் நடந்த இடத்தில் கட்டுமான பணிகள் எதுவும் நடைபெற்றதா என்று நினைவில்லை. நான் சொன்னதுபோல எந்த போராட்டமும் நடைபெறவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

அசா1, 2க்கு காயம் எற்பட்ட காயங்களுக்கு எதிரிகள் எந்த விதத்திலும் காரணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 17th day of February 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**